உ

கணபதி துணை.

# கடம்பர்கோயில் உலா.

இது

மஹாமஹோபாத்யாய - தாக்ஷிணாத்யகலாநிதி


Dr. உ. வே. சாமிநாதையரவர்களால்


பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.


செந்தமிழ்ப்பிரசுரம் — ௫௩.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

விலை அணா 6.

உ

கணபதி துணை.

# முகவுரை.

திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரியந்தமி ழோடிசை யானவன்
கூரியகுணத் தார்குறி நின்றவன்
காரிகையுடை யான்கடம் பந்துறைச்
சீரியல்பத்தர் சென்றடை மின்களே.

தேவாரவைப்பு

"காவிரிசூழ் கடம்பந்துறை யுறைவார் காப்புக்களே."

"கடைமுடிகானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே."

"மயிலாடுதுறை கடம்பந்துறை யாவடுதுறை
மற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே"—திருநா.

"பாங்கூ ரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை"—சுந்தர.

காடவர்கோன் திருவெண்பா.

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய வொண்ணு—கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு.

திருச்சிற்றம்பலம்.

உலாவென்னும் தமிழ்ப்பிரபந்தம் பாட்டுடைத்தலைவனது பவனியைச்சிறப்பித்துப் பாடப்படுதலால் இப்பெயர்பெற்றது; உலா—பவனி. தலைவன் வீதியிற் பவனிவருகையில் அவ்வீதியின்கணுள்ள பேதைமுதற் பேரிளம்பெண் ஈறுகிய எழுபருவமகளிரும் அவனைக்கண்டு காதல்கூர்ந்ததாகக் கலிவெண்பாவாற் பாடப்படுவது இது. இதன்கண் பாட்டுடைத்தலைவனது பலவகைப்பெருமைகள், எழுபருவமகளிர்களின் இயல்பு, அவர்களடைந்த மெய்ப்பாட்டுவகைகள் முதலியன காணப்படும்,

தத்தம் புலமைத்திறத்திற்கேற்பக் கருத்துக்களைத் தொடர்புபெற அமைத்து விரித்துத் தாம் வழிபடுதெய்வங்கள்மீதும், தம் ஆசிரியர் மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள்மீதும் பலபுலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கின்றனர்.

சேரமான்பெருமாணாயனாரால் இயற்றப்பட்ட ஆதியுலாவும், தத்துவராயரால் இயற்றப்பெற்ற ஞானவிநோதன்உலாவும், கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற மூவருலாவும் ஆகிய பழையநூல்கள் முறையே இம்மூன்று வகைக்கும் உதாரணங்களாக உள்ளவை.

தலங்களிலுள்ள மூர்த்திகளைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்ட தமிழ்ப்பிரபந்தங்கள் பிற்காலத்து மலிந்தன. அவ்வகையில் உலாக்களும் இயற்றப்பட்டன. "நன்னெடு வீதியின், மதகளிறூர்தன் முதனிலை யாகும்" (பன்னிருபாட்டியல், சூ. 216) என்ற சூத்திரத்தோடு இயையப் பாட்டுடைத்தலைவர்களாகிய அரசர்கள் களிற்றின்மீது பவனிவந்தனரென மூவருலாவிற் காணப்படுகின்றது. ஆதியுலாவிற் சிவபெருமான் இடபவாகனத்தின்மீது எழுந்தருளியதாகச் சொல்லப்பட்டுள்ளது. தலசம்பந்தமாகப் பிற்காலத்து இயற்றப்பெற்ற உலாக்களில் அவ்வத்தலத்திலுள்ள நாயகர் (ஸோமாஸ்கந்தர்) திருத்தேரில் எழுந்தருளியதாக அமைக்கப்பட்டுள்ளது. சொக்கநாதருலாவில்மட்டும் தேர் முதலிய ஏழுவாகனங்களிற் சொக்கநாதர் ஏழுநாள் உலாப்போந்ததாகக் காணப்படுகின்றது.

*தலசம்பந்தமான உலாக்கள் அவ்வத்தலத்துக்குரிய கணிகையர்களால், தொன்றுதொட்டுப் பாடப்பெற்றுவந்தன. உலாக்களிற்கூறப்படும்†ஏழுபருவமகளிரும் பொதுமகளிராதலின் இப்பிரபந்தம் அவர்களோடு தொடர்புடையதாயிற்று.

மகளிர்க்குரிய ஏழுபருவங்களின் இயல்புகள் ஒவ்வோருலாவிலும் வருணிக்கப்படுமேனும் ஒவ்வொன்றும் தனித்தனியான சிறப்புக்களோடு விளங்கும். பெருங்கதையில் நீராட்டரவம் என்னும் பகுதியில் இவ்வேழுபருவ மகளிருடைய இயல்புகள் கூறப்பட்டுள்ளன. நிற்க.

---

*இப்பொழுது இந்த வழக்கம் பலதலங்களில் அருகிவிட்டது.

†சொக்கநாதருலா, முகவுரையைப் பார்க்க.

## தலவரலாறு.

கடம்பர்கோயிலுலாவென்பது சோழநாட்டிற் காவிரியின் தென் கரையிலுள்ளதும் தேவாரம் முதலியவற்றைப் பெற்றதுமாகிய கடம்பர் கோயிலென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது தெரியவில்லை. ஆனாலும் திருத்தேரை, "திருவாவடுதுறையி, லெம்பிரா னன்ப ரிதயமோ" (கண்ணி, 84) என்பதனால் அவர் திருவாவடுதுறையாதீனத்து அடியவராகிய ஒரு பெரியவரென்று கருதப்படுகிறார்.

இத்தலத்துமூர்த்தி கடம்பவனநாதர், சுந்தரேசர், ஸௌந்தரரென வழங்கப்பெறுவர்.

அம்பிகையின் திருநாமம் முற்றாமுலையம்மையென்பது (29, 57, 74, 179); இது வடமொழியில் பாலகுசாம்பிகை என வழங்கும்.

தலவிருட்சம்:கடம்பமரம், 13, 25, 41.

தீர்த்தம்: காவிரியாறு; 16, 34, 46, 58, 361. பிரமதீர்த்தமென்ற ஒருதீர்த்தமும் உண்டு; கோவையாரில், "தண்கடம் பைத்தடம் போற் கடுங் கானகந் தண்ணெனவே" (220) என்று சொல்லப்படும் கடம்பைத் தடம் இதுவாக இருத்தல்கூடுமென்று தோற்றுகிறது.

இத்தலம் கடம்பை, கடம்பந்துறை, கடம்பவனம், தட்சிணகாசி, குழித்தண்டலையெனவும் வழங்கும். பிரமதேவர் வழிபட்டுத் திருக்கோயில் முதலியன அமைத்துத் திருத்தேர்விழாவும் நடத்தினமையாற் பிரமபுரமென்றும் (19), சோமகாசுரனிடத்திலிருந்து திருமால் வேதங்களை மீட்டற்குக்காரணமாகிய திருவருளைப்பெற்ற இடமாதலிற் சதுர்வேதபுரியென்றும் (33-6), முருகவேள் பூசித்துப் பேறுபெற்றமையிற் கந்தபுரமென்றும் (37) இது பெயர்பெறும். இத்தலத்திற் சத்தகன்னியர் பூசித்து, தம்மைப்பற்றி வருத்திய பிரமகத்தியினின்றும் நீங்கினர் (21-6); வேதசன்மாவென்னும் ஓரந்தணர் தவம்புரிந்து மதுரையில் நிகழ்ந்த திருமணக்கோலத்தை இங்கே தரிசித்தனர் (27-31); அகத்திய முனிவர் பூசித்துப் பேறுபெற்றனர்; 32.

இத்தலத்துத் திருக்கோயிலில், பிரமதேவர், சத்தமாதர்கள், அகத்தியமுனிவர் முதலியவர்களுடைய திருவுருவங்கள் தனித்தனியே உள்ளன. *இப்பொழுது கடம்பர்கோயிலைச்சார்ந்ததும், குழித்தலை என வழங்குவதுமாகிய ஊரின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்வாமியின் திருநாமம் ஸ்ரீசுந்தரேசுவரரென்பது, அம்பிகை யின் திருநாமம் ஸ்ரீமீனாட்சியென்பது. இவற்றை நோக்கும்பொழுது கடம்பர்கோயிலிற் சிவபெருமான் திருமணக்கோலம் காட்டியதன் அறிகுறியாக இவ்வாலயம் பண்டைக்காலத்தில் அமைக்கப்பெற்ற தென்று கருதப்படுகின்றது.

இத்தலத்திற்குத் திருநாவுக்கரசுநாயனர் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றும், ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளிய திருவெண்பா ஒன்றும், ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழும் உண்டு.

120-ஆம் கண்ணியால் காளத்தியென்பவரால் இயற்றப்பெற்ற அந்தாதி ஒன்று உண்டென்று தெரிகின்றது. மதுரைத் திருப்பணி மாலையால், பாகையென்னும் ஊரிலிருந்த காளத்தியப்பமுதலியாரென் பவர் ஒருவர் மதுரையிற் சில திருப்பணிகள்செய்தாரென்று புலப்படு கின்றது. அவர் இவ்வந்தாதி செய்தவராகக் கருதப்படுகிறார்.

இவையன்றி வடமொழியில் ஒருபுராணம் உண்டு. திருவாரூர் ஸ்ரீ முத்துஸாமிதீக்ஷிதரென்னும் சங்கீதவித்வானல் கேதார கௌளராகத்தில் இயற்றப்பெற்ற மிகச்செவ்விதாகிய, "நீலகண்டம் பஜே" என்னும் வடமொழிக்கீர்த்தனம் ஒன்றும் இத்தலத்திற்கு உண்டு.

"சேர்தொண்டை மண்டலத்தோர் செய்தபெரும் புண்ணியமோ, ஈதென்னும் பொற்றடந்தேர்" (85) என்னுங் கண்ணியால் இத்தலத்தில் அக்காலத்தில் இருந்த சிவபக்திச்செல்வர்களாகிய தொண்டைமண்டல வேளாளர்களால் திருத்தேர் இயற்றப்பெற்றதென்பதும், 86-7-ஆம் கண்ணிகளால் பாகையென்னும் ஊரிலிருந்த சரவணையென்னும் ஒரு செல்வர் இத்தலத்துச் சிவபெருமானுக்குத் திருவாபரணங்கள் செய்து சாத்தினரென்பதும் தெரியவருகின்றன.

---

*இச்செய்தியையும் வேறுசிலவற்றையும் எனக்குத்தெரிவித்தவர், குளித்தலை போர்டுஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் ப்ரம்மஸ்ரீ அருணசலசாஸ்திரிகள்.

பாகையென்பது தொண்டைநாட்டில் திருக்கூவமென்னுந்தலத் துக்கு அருகிலுள்ள பாகசாலையென்னும் ஊர். அவ்வூரினராகிய சரவணமுதலியாரென்பவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200-வருடங் களுக்குமுன்பு திரிசிராப்பள்ளி நவாபினிடம் மந்திரியாக இருந்தவர். அவர் இத்தலத்தில் இருந்த திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் மடபதியாக இருந்தவர்பால் நேசம் உடையவராக இருந்தார். அவ்விருவர்க ளும் சேர்ந்து கடம்பந்துறைக்கோயிலைப் புதுப்பித்துத் திருத்தேர், திருவாபரணம் முதலியவை செய்துவைத்திருக்கிறார்கள். மதுரைக் கோயிலிலும், அக்காலத்திலிருந்த மாணிக்கவாசக தம்பிரானென்பவர் மூலமாக இவர் சில கட்டளைகளை நடத்திவந்தார். கலியப்தம், 4790-இல் பல ஜமீன்தார்கள் இவரது சிவபக்திமுதலியவற்றை உணர்ந்து இவருக்குப் பலகிராமங்களைச் செப்புச்சாஸனம் மூலமாக அளித்திருக் கிறார்கள். இவருடைய உருவம் கடம்பந்துறைக்கோயில் தூணில் அமைக்கப்பட்டுள்ளது. கலி. 4890-இல் இவரது பௌத்திரராகிய சரவணமுதலியாரென்பவர்காலத்தும் சில நிலங்கள் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரியவருகின்றது.

## நூலாராய்ச்சி.

ஏழுபருவமாதர்களுடைய இயல்புகளும் விளையாட்டுக்களும் மரபு வழுவாமல் இந்நூலிற் கூறப்படுகின்றன.

### பேதை.

ஆசிரியர் பேதையை வருணிக்கையில் மன்மதன் விற்குணத்தைக் கண்டறியா மெல்லரும்பு, தான்உரைக்கும் சொற்குணத்தை ஓராச் சுகப் பிள்ளை பென்று உருவகம் செய்கின்றார். இத்தலத்தொடர்பமைய, “பொற்கை, உழையார் கடம்பலர்மட் டுண்டறியா வண்டு” (144-5) என் கின்றார். “கம்ப ருறையுங் கடவுளிளஞ் சூதத்தின், கொம்பி லுறையாக் குயிற்பிள்ளை” (ஏகாம்பரநாதருலா), “என்னானைக் கன்று சிமயத் தாரா தாத்து, மன்னுத சஞ்சீ வனக்கன்று” (திருவானைக்காவுலா) “மைதிகழு நீலகண்டன் வாழ்கின்ற புட்பவன, மெய்த்திவிளை யாடா விளஞ்சுரும்பு” (திருப்பூவணநாதருலா) எனப் பிறரும் இங்ஙனமே கூறுதல் காண்க. பின்னும் இவர், “நீணிலத்து மன்னுங் கலைபொருந்தா மான்கன்று”, “நீர் பின்னஞ் செயவறியாப் பிள்ளையன்னம்” எனச் சிலேடைநயம்பட

உருவகம்செய்கின்றார். அவளுடைய முடிக்கப்படாத கூந்தலுக்கு எழுவாய்ப்பயனிலையின்றி முடிக்கப்படாமலிருக்கும் புன்கவிஞருடைய செய்யுளை உவமிக்கின்றார். அவளுடைய இனிய மழலைமொழிக்கு உவமையாகத் தொண்டர்கள் பக்திபரவசர்களாகி இறைவன்முன் நாத் தழுதழுத்துக்கூறும் துதியைச் சொல்லுதல் அறிந்து மகிழ்தற் குரியது. அவள் பாவையோடுபயிலல் சிற்றிலியற்றிச் சிறுசோறட்டு விளையாடல் முதலிய பேதைப்பருவத்திற்குரிய செயல்களை மரபுவழுவா மல் அமைக்கின்றார். சிறுசோற்றை, "ஆனார்க் கிட்டமுறும், அன்ப ருலகத் தருந்தா தருந்திடுசிற், றின்பமென" அவளுண்டாளென்பதனால், அன்பர்களுடைய இயல்பைப் புலப்படுத்துகின்றார். அவள் கடம்பவன நாதனைக்கண்டு இவர் யாரென்று செவிலியரைக்கேட்ப அவர்கள் விடை கூறும்பகுதியில் அவள்பருவத்துக்கேற்ப, "அண்டங்களைச் சிற்றிலாகச் சமைத்து விளையாடும் பாலன்" என்னும் பொருள்தோன்றக்கூறிப்பின் பலமுறை பாலனென்னும் பெயர் தொனிக்குமாறு இறைவனுடைய தன்மைகளை அவர்கள் எடுத்துச் சொல்லுவதாக அமைத்திருக்கின்றார்.

## பெதும்பை.

பெதும்பை, அன்பு அரும்பினும் அது முற்றுப்பருவத்தினள். இப்பருவம் புனைவதற்கரியதென்பதை, "பேசு முலாவிற் பெதும்பைபுலி" என்னும் செய்யுட்பகுதியால் அறியலாம். இப்பருவத்தினளை, "பேதை குணம் பாதிமங்கைப் பெண்குணத்திற் பாதிகலந், தோது பருவ முறு பெதும்பை" (172) எனத் தகுதிபெற இவ்வாசிரியர் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இங்ஙனம் வேறு யாரும் கூறியதாகத் தெரிய வில்லை. காதலென்னும் வித்து முளைத்து நெஞ்சைக் கொழு கொம்பாகக்கொண்டு வளருந் தன்மையினளென அவளியல்பைப் புலப் படுத்துகின்றார். அவளது முடிக்கப்பட்டகூந்தலுக்குத் தவங்கள் பல செய்தும் முடிவுபெறுமல் ஈசனருளெய்துங்காலத்திலே நிறை வேறி முடிபுஞ்செயலை உவமையாக்குகின்றார். அவள் நீலம், முத்து, பச்சை, மாணிக்கம், கோமேதகம், வைரம், பவளமென்னும் ஏழுவகை மணிகளாலாகிய ஏழு கழங்குகளை எடுத்து ஆடத்தொடங்கியதாக ஒரு செய்தியை அமைக்கின்றார். இப்பகுதியில் அவ் வேழு கழங்கிற்கும் சிவபெருமானோடு தொடர்புடைய பொருள்களையே உவமைகூறுகின்றார்.

பெதும்பைப்பருவப்பெண்கள் எழுகற்களையேனும் எழுகழற்சிக்காய்களையேனும் ஒருவகைப் பாட்டுப்பாடி ஆடுதல் தமிழ்நாட்டுவழக்கு. அப்பாட்டில் ஒன்றுமுதல் எழு எண்வரையுள்ள பொருள்கள் முறையே கூறப்படும். இம்முறையைப் பின்பற்றி இங்கே ஆசிரியர் ஒன்றுமுதல் ஏழுவரையிலுள்ள எண்கள் அமையத் தலப்பெயரையேனும் தலங்களின் செய்திகளையேனும் எடுத்துக்காட்டுகின்றார். அவ்வகையில் ஒன்றுக்கு ஏகாம்பரமும், இரண்டுக்கு இருவர்தேடும் மலையும், மூன்றுக்குத் திரிசிராப்பள்ளியும், நான்குக்கு நான்மாடக்கூடலும், ஐந்துக்குப் பஞ்சநதியும், ஆறுக்கு ஆறுபெண்கள் அட்டமாசித்திபெற்ற பட்டமங்கையும், எழுக்கு ஏழுலகத்தலங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு எழுகழங்குகளுக்குரிய பாடற்பொருளாகத் தலச்செய்திகள் அமைக்கப்பெற்றிருத்தலைத் திருவானைக்காவுலா, ஏகாம்பரநாதருலா, திருக்காளத்திநாதருலா, இரத்தினகிரி (வாட்போக்கி) யுலா, திருவெங்கடவுலா என்பவற்றிற் காணலாம்.

பெதும்பை, கடம்பவனநாதரைத் தரிசித்ததை, “மாலளந்து காணு மலையை யிருவிழிக்கோ லாலளந்தாள்” என்கின்றார். அவள் நிலையைக் கண்ட தாய்மார், “தன்னை யறியும் தருணம்வந்த தாற்றலைவன், றன்னை மனக்குறிப்பிற் றானறிந்தாள்” என்று கூறுகின்றனர். இதன்கண், பெதும்பை மங்கைப்பருவத்தன்மைவாய்ந்தனளென்பது குறிப்பிக்கப்படுகின்றது; “நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்டோற்று, நின்றறிவு தோற்று நிறைதோற்று-நன்றாகக், கைவண்டும் கண்வண்டு மோடக் கலையோட, நெய்விண்ட பூங்குழலா ளின்றெழுந்தாள்” (பெதும்பை) என ஆதியுலாவும், “மல்கு மூவகைக் கலுழி வரவரப், பில்கு.......கொங்கைப் புதுவரவும் தோளும் குறைநிரம்ப, மங்கைப் பருவத்தே வாங்கினாள்” (பெதும்பை) என இராசராசசோழனுலாவும், “உருவமிகப் பாரித் தொளிபடைத்து மற்றைப், பருவ மெனப்புளகம் பாரித்-தொருவாத, பேரழகு கந்தம் பெருமாட்டிக் கெய்தியது” எனச் சொக்கநாதருலாவும் கூறுகின்றன. பெதும்பையின் நிலைகண்ட செவிலியர் இறைவனை நோக்கி, “மேற்பசப்புக், காட்டுமான் காட்டியிசைக் கானமறி யாதவெங்கள், வீட்டுமான் கைக்கொளவோ வீதிவந்தீர்” என்று கூறும் சொற்களில் சிலேடையும், மானைக்காட்டி மானைப்பிடிப்பதென்னும் வழக்கமும் அமைந்துள்ளன.

## மங்கை.

மங்கைப்பருவத்தினளை, "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்றாற்போலவே, "பேதை யரும்பிப் பெதும்பை யந்தப் போதாகி, மாது மலர்ந்த வனப்பினள்" என்கின்றார். இக்கருத்து முற்பருவத்துநிலைமையையும் இப்பருவநிலைமையையும் புலப்படுத்துகின்றது. 'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மந்திரிமார்கள் சூழ நிலவிய மகுடத்தைச் சூட்டிப் பெண்கள் மன்மதனுக்குரிய மந்திரங்களையுரைக்க மனமாகிய சிங்காதனத்திலேற்றிச் சிவபெருமானுடைய புகழாகிய அபிஷேகத்தைச் செய்து மூர்த்திகரமுண்டாக்கி மோகமாகிய அரசனுக்குப் பட்டந்தரித்தாள்' என்பதில் அவளது காதல் முற்றிய தன்மையை விளக்குகின்றார். அவள் சிவபெருமான்புகழைப் பாடி அம்மானையாடினாளென்பதை, "அம்மானை யாடிவந்த வம்மானைப் பாடியே, யம்மானை யாடு மளவிலே" என்று சொற்பின்வருநிலையணிபடச்சொல்லுகின்றார். திருவானைக்காவுலாவில் அரிவைப்பருவத்தில் அம்மானை கூறப்படுகின்றது. திருக்காளத்திநாதருலாவில் மங்கைப்பருவத்தில், "தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த வம்மானை, அன்னைதனை யீன்ற மலை யம்மானை—முன்னாளட், கொங்கையொரு மூன்றுடைய கொம்பை யரு ளம்மானை, யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக்—கங்கைபெறும், அம்மானைப் பெற்றசடை யம்மானைப் பாடியவ, ளம்மானை யாடு மளவிலே" என வருவதும், இரத்தினகிரியுலாவில் மங்கைப்பருவத்திலும் திருப்பூவணநாதருலாவில் மங்கைப்பருவத்திலும் அம்மானைகூறப்படும் பகுதிகளும் இதனோடு ஒப்புமை உடையன.

## மடந்தை.

மடந்தைப்பருவத்திற் பின்னுள்ளசெய்தி கூறப்படுகின்றது: மடந்தைப்பருவப்பெண் தன் பாங்கி ஒருத்தியை விளித்து, "ஓர் ஓவியனை அழைத்துவந்து கடம்பவனநாதர் திருவுருவத்தை எழுதும்படி கூறுவாயாக" என்றாள். அதற்குப் பாங்கி, "அப்பெருமானை யாரெழுதவல்லார்? அவரது திருமுடியை எழுதினாலும் அதிலே கங்கையை எவ்வாறு அமைத்தல்கூடும்? திருநெற்றியை வரைந்தாலும் அதிலுள்ள அக்கினிக்கண்ணை எங்ஙனம் எழுதுவான்? மற்ற இரண்டு கண்களைத் தீட்டினாலும் அவற்றில் அருட்பார்வையை எப்படிப்

பொருத்தமுடியும்? திருச்செவியில் தோடுகளை எழுதினாலும் அத்தோட்டு வடிவமாகவுள்ள கம்பளாசுவதரர்களென்னும் இசைவல்லார்களின் பாடலைப் புலப்படுத்தமுடியுமோ? திருக்கழுத்தை எழுதினாலும் அது வேதத்தை முழங்கும்படி செய்ய முடியுமோ? திருக்கரங்களை எழுதினாலும் அவை உன்னைத் தழுவிக்கொள்ளும்படி செய்வானே? திருவடிகளை எழுதினாலும் கால்மாறியாடலைக் காட்டமுடியுமோ? அவனை அறிஞர்களே அறிவார்கள். இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தன் — ஒப்புடையன், ஆமென் றெழுதவல்லா ரியாரோ" என்று விடை கூறினாள்.

ஓவியத்திற் கடவுளின் திருவுருவை எழுதுவித்துக் கண்டு மகிழும் விருப்பம் மடந்தைக்கு இருந்தமையை இவ்வாசிரியர் கூறுதலைப் போலவே சிலசில வேறுபாடுகளுடன் வெவ்வேறுபருவப்பெண்கள் அங்ஙனம் விரும்புவதைச் சில உலாக்கள் கூறுகின்றன. ஏகாம்பரநாதருலாவில் அரிவைப்பருவத்தினள் ஒரு சித்திரசாலையிற்சென்று காஞ்சித் தலசம்பந்தமான வரலாறுகளைப் புலப்படுத்தும் ஓவியங்களைக்கண்டு மகிழ்ந்தாளென்றும், திருப்பூவணநாதருலாவில் தெரிவைப்பருவத்தினள் ஓர் ஓவியனை அழைத்துத் திருப்பூவணநாதர் திருவிளையாட்டு முதலியவற்றை எழுதுமாறுசெய்து கண்டு களித்தாளென்றும், சங்கரலிங்க உலாவில் பேரிளம்பெண்பருவத்தினள் சித்திரசாலையிற்சென்று அங்கே எழுதியிருந்த சங்கரலிங்கத்தின் திருவிளையாடல்களின் உருவத்தைப் பிறருக்குக்காட்டினாளென்றும், தஞ்சைப் பெருவுடையாருலாவிற் பெதும்பைப்பருவத்தினள் ஓவியன் ஒருவனைக் கண்டு சோமாஸ்கந்தமூர்த்தியின் திருவுருவத்தைத் தீட்டித்தரச்செய்து கண்டாளென்றும் கூறப்பட்ட செய்திகளால் இவ்வழக்கத்தை அறியலாம்.

## அரிவை.

அரிவையின் வருணனையில் சிலேடையொடுகூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. அவளுடைய கண் மானை மருட்டி வண்டைச் சிறைப்படுத்தி மீனைப் பயமுறுத்தி வனசத்தைப் பங்கமுறச்செய்து குவளையை வனத்தில் ஏற்றி வாரிதியை அதோகதியாகப் பண்ணி விஷத்திற்கு நித்யகண்டமேவும் நிலைகொடுத்து வேல்முனையைச் சத்தியிலையெனவும் கத்தியை உறையிடக்காணாதெனவும் சொல்லச் செய்து தொலைக்குணத்தில் தன்னைநோக்க யமன் தருமனென்னும்

பெயரால் வழங்கச்செய்ததென்று புனேயும் பகுதியில் அவ்வப்பொருள்களின் இயற்கைத்தன்மையையும் தொழிலையும் பெயரையும் வேறு பொருள்படும்படி தோற்றச்செய்து அமைத்துள்ளார். அவள்குழல், "சூரியன்வந்தாலும் நீர் என்றுவந்தீர்? என்று அஞ்சாமற் கேட்கும் இருளைப்போன்றது" என்று சொல்வதில் நகைச்சுவை காணப்படுகின்றது.

அவள் ஒரு விறலியை அழைத்துத் தேவர்களுக்குள்ளே வீரம் கருணை அழகு என்னும் மூன்றினுலும் மிக்கவர் யார் என்று கேட்ப' அவ்விறலி காமதகனம், திரிபுரசங்காரம், தக்கயாகசங்காரம், பிரமன் தலையைக்கொய்தது, அந்தகாசுர சங்காரம், காலசங்காரம் முதலிய வீரச் செயல்களைச் சொல்லிச் சிவபெருமானது வீரத்தையும்; யானை, வண்டு, சிலந்தி, பாம்பு, கரிக்குருவி, பன்றிக்குட்டிகள், எறும்பு முதலிய விலங்கினங்கட்கும் திருவருள்செய்ததைச் சொல்லி அவரது பெருங்கருணையையும்; முனிவர்களும் பெண்மையை அவாவிய பேரழகையுடைய திருமாலே பெண்ணாகி அவாவும் அழகுடையவரென்று சொல்லி அவரது அழகையும் புலப்படுத்தி, "வீரப் பெருக்கழகன மென் கருணைச் சீரழகன், ஆரத் திருமேனி யாரழகன்" (309) ஆகிய அவரே யாவற்றிலும் மிக்கவரென்று வீணைவாசித்தல் முகமாகக்கூறினளென்ற ஒருசெய்தி காணப்படுகின்றது. இவ்வாறு பாட்டுடைத்தலைவருடைய ஏற்றத்தைப் புலப்படுத்தும்வழக்கு வேறு சில உலாக்களிலும் உண்டு. ஏகாம்பரநாதருலாவில் பேரிளம்பெண் அந்தணரொருவரைநோக்கி, "சிவபெருமான்நிலைக்கும் ஏனைத்தேவர்நிலைக்கும் வாசி கூறுக" எனக் கேட்க, அவர் சிவபெருமான்பெருமையைப் புலப்படுத்தியதாக அமைத்த செய்தியும்; திருக்காளத்திநாதருலாவில் அரிவை விறலியொருத்தியை அழைத்துப் பெண்களை ஆட்கொண்ட அழகுடைய நாயகர்களுக்குள்ளே சிறந்தவர் யாரென்றுகேட்ப அவள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு குற்றம் கூறிச் சிவபெருமானே சிறந்தவரென நிறுவுவதாக உள்ள செய்தியும்; இரத்தினகிரியுலாவில் மடந்தை பாங்கியர்களைப்பார்த்து, 'விண்ணுக்கு மண்ணுக்கும் வேறு மூலநூற்கும், கண்ணுக் கினியவராங் காவலரை எண்ணித்தான், சொல்லுவீர்" என்ன அவர்கள் சிவபெருமானே அத் தகையவரெனக் காரணங்காட்டிப் புலப்படுத்தியதாகக் கூறப்படும் செய்தியும் இவ்வகையைச் சார்ந்தனவே.

## தேரிவை,

தெரிவைப்பருவத்தில் குறத்தியின்செய்தி ஒன்று சொல்லப்படு கிறது. அது வருமாறு:

தெரிவை மணிமேடையில் வீற்றிருக்கையில் குறிசொல்லும் குறத்தி ஒருத்தி அங்கே வந்தாள். அவளைக்கண்ட தெரிவை, "என் மனக் குறிப்பையறிந்து சொல்வாயாக" என்றாள். அவள், "ஒரு வருடம் சொல்வாயாக" என்றாள். "பதினோராவதுவருடம்" என்றாள் தெரிவை. அவ்வருடம் 'ஈசுவர' ஆதலின், "ஈசுவரன்பால் உனக்கு விருப்பம் இருக்கின்றது" என்றாள். பின் ஒருமாதத்தைச்சொல் என்று அவள் கூற, தெரிவை, "நான்காவதுமாதம்" என்றாள். அம்மாதம் ஆடி யாதலின், "மன்றுடிமீதில் விருப்பம் உனக்கு இருக்கிறது" என்றாள். பின்னும் குறத்தி ஒருவாரத்தைக் கேட்க இரண்டாவது வாரமென்றாள். அது சோமவாரமாதலின், "நீ சோமசேகரனை விரும்புகின்றாய்" என்றாள் குறத்தி. அவர் வருவாரோ எனத் தெரிவைகேட்ப, "வந்து அவர் அருள் செய்வார்" என்று குறத்தி கூறிப் பரிசுபெற்றுச் சென்றாளென்பது.

இவ்வாறு குறத்திபாற் குறிகேட்கும்வழக்கம், உலா நூல்களுள் சங்கரசோழனுலாவில் பெதும்பைப்பருவத்தில், "தூற்று, விசும்பின் மழைகடுப்ப மெய்க்குறஞ்சொன் னாட்குப், பசும்பொன் மழைபொழியப் பார்த்தும்" எனச் சுருக்கமாகவும், தஞ்சைப்பெருவுடையாருலாவில் மடந்தைப்பருவத்தில் குறத்தி தலைவியின் கைரேகையைப்பார்த்துக் குறிசொன்னாள் என்னும்பகுதியில் விரிவாகவும் காணப்படுகின்றது.

## பேரிளம்பெண்,

பேரிளம்பெண்வருணனையில் அவள்குழலைப் பிராயத்திற்கேற்ப, "இருட்டறையுட் பல்கணியி லெய்துநிலாக் கூடும், இருட்டனைநே ரூடு நரை யெய்தும்—திருக்குழல்" என்பார். பூணணிதலையும் மையிடுதலை யும் அவள் நீத்தவளென்பார். இவ்வாறே பிற உலாக்களிலும் காணப்படு கின்றது.

அவள் ஒரு பூங்காவை அடைந்து அங்கே உள்ள ஒவ்வொரு மரத்தையும் கண்டு அவ்வம் மரம் தலவிருட்சமாக உள்ள தலத்தை நினைந்து பாவினளென்கின்றனர். இம்முறை, திருவானைக்கா உலாவில் பேரிளம்பெண்பருவத்திலும், சொக்கநாதருலாவில் அரிவைப் பருவத்திலும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண் இறைவரது சேவையையேசெய்துகொண்டிருப்பவளென்பது பல உலாக்களிற் கூறப்படும். இவர், "பரன்சேவை யன்றிப், புதுமை விழிக்குப் பொருந்தாள்" என்பதில் அக்கருத்தைச் சிலேடையில் நன்கு அமைத்துக்காட்டுகின்றார்.

## பிறதலங்கள்.

இந்நூலில் பலதலங்களைப்பற்றியசெய்திகள் இடையிடையே கூறப்படுகின்றன.

கடம்பவனநாதர் எழுந்தருளுகையில் இன்ன இன்ன தலத்தையுடையவர் வந்தாரென்று திருச்சின்னம் முழங்கின எனக் கூறப்படும் பகுதியில் பலதலங்களின் பெயர்கள் வேறுதொனிப்பொருள் தோற்றுகின்ற அடைமொழிகளோடு ஆளப்படுகின்றன. இதனை, 'அங்கயற்கண்ணிசார் கூடலான், ஆட்டைவிடாப் புலியூரான், சண்மதத்து மேலான தந்திவனத்தான், மண்பரவு புற்றிடத்தான், ஆவணத்து முற்றும்விலையா மென்றவன், பூவணத்து வாசப் பொருள், துன்பக்கடல் கடத்துந் தோணிபுரத்தான், இன்பவெள்ளத்து ஐயாற்றிறை, தேவி மருங்கமரும் காஞ்சிபுரன், துதிக்கைபெற்ற வாரணவாசியான், பைக்குளடங்காத மாணிக்கமலையான், ஆனந்தத்தேனை அன்பர்க் கூட்டிவைக்கும் ஈங்கோய் மலையெம் பிரான்' என்பவற்றா லறியலாகும். இப்பகுதியிற் சொல்லப்பட்டதலங்கள் முறையே மதுரை, தில்லை, திருவானைக்கா, திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பூவணம், சீகாழி, திருவையாறு, காஞ்சீபுரம், காசி, இரத்தினகிரி, திருவீங்கோய்மலை என்பன (112-9). பெதும்பை கழங்காடுகையிற் பாடுவதாக அமைத்துள்ள தலங்கள் திருவேகம்பம், திருவண்ணாமலை, திரிசிராப்பள்ளி, மதுரை, திருவையாறு, பட்டமங்கை என்பன. பின்னும் விறலியொருத்தி இறைவர்கருணையைப் புலப்படுத்தற்காக அவரை வழிபட்டு அருள்பெற்ற விலங்கு முதலியவற்றைக்கூறும்வாயிலாகச் சிலதலங்கள் குறிப்பிக்கப்படுகின்றன. அவை, திருக்காளத்தி, திருவானைக்கா, ஸ்ரீசைலம், திருவண்டுறை, திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம், திருநாகைக்காரோணம், திருப்பாம்புரம், திருப்பாம்பணி, திருக்கேதீச்சுரம், திருவாலவாய், திருக்குற்றாலம், திருவெறும்பீச்சுரம் (303—5) முதலியன.

பேரிளம்பெண், பூங்காவை அடைந்து ஒவ்வொரு மரத்தையுங் கண்டு அவ்வம்மரத்தைத் தமக்குரிய விருட்சமாகப்பெற்ற தலங்களை நினைந்து வழிபட்டதாகக் கூறும்பகுதியில் வந்துள்ளவை: திருப்பைஞ்ஞீலி, திருக்குற்றாலம், திருநெல்வேலி, திருமுல்லைவாயில், திருவேகம்பம், திருவாட்போக்கி, திருவீங்கோய்மலை, திருவாலீசம் (அபிநூர்) என்பன. அவள் இன்பத்தைப் பயிரின் விளைவாக உருவகம்செய்யும் பகுதியில், "காட்சிக் கதிர்தோன்ற, எமமுறு நெல்வேலி யீசரே" எனத் திருநெல்வேலி அதற்கு இயைபுற எடுத்தாளப்படுகின்றது.

கடம்பவிருட்சம், திருமணக்கோலக்காட்சி, சுந்தரரென்னும் திருநாமமென்பவற்றால், இத்தலம் மதுரையோடு ஒப்புமையுடையதாதலின், அத்தலச் செய்திகள் பல இதன்கண் எடுத்தாளப்படுகின்றன; "செல்லாருஞ் சோலைத் திருவால வாயதனில், வில்லாரு மிந்திரவி மானத்துட்—கல்லானை, சித்தாரு ளாற்கரும்பு தின்னுமங்நாட் டென்னனணி, முத்து வடம் போலுமிள மூரலாள்" (150–51) என்பதில் திருவாலவாயென்னும் திருநாமமும் இந்திரவிமானமும் கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடலும், "மையேந்து சோலை மதுரை நகர்க்கவுரி, கையேந்து பாலன்" (167) என்பதில் விருத்தகுமார பாலரான திருவிளையாடலும், "மீனக் கொடியன் விரைவிற் பயந்ததால்" (238) என்பதில் தடாதகைப் பிராட்டி திருவவதாரமும், "தாண்மாறி ஆட்டுவிக்கப் பாண்டியனு ரல்லனே" (260) என்பதில் கான்மாறியாடிய திருவிளையாடலும், "முன்னு ளிசைவாது சாய்ந்திடவே, எம்பிரான் கூட விறைவனரு ளாற்செயித்த, கும்பமுலை மாமயிலே" (292–3) என்பதில் இசைவாதுவென்ற திருவிளையாடலும், "வல்லமையில் லாதகய வாய்தமக்கும்—வெல்லமரில், அன்னை யிழந்த வடலேனக் குட்டிகட்கும் ........ அன்புதவி" (303–5) என்பதில் கரிக்குருவிக்கு உபதேசம்செய்த திருவிளையாடலும், பன்றிக் குட்டிக்குப் பால்கொடுத்த திருவிளையாடலும் குறிக்கப்படுகின்றன.

கடம்பவனநாதருக்குரிய தசாங்கங்கள் 360-ஆம் கண்ணி முதலியவற்றில் மடக்கணி அமையச் சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:— (1) மலை: கயிலைமலை, (2) ஆறு: காவிரி, (3) நாடு: சோழநாடு, (4) நகர்: கடம்பர்கோயில், (5) மாலை: கொன்றை, (6) குதிரை: வேதம், (7) யானை: அயிராவணம், (8) கொடி: இடபம், (9) முரசு: ஓங்காரம், (10) ஆணை: சந்திரன் முதலியவற்றை நிலைபெயராது ஒழுகச்செய்யும் ஆணை.

## சிவபெருமான்பெருமை.

இன்னும் சிவபெருமானது பெருமைகளைப் பலவாற்றானும் எடுத்துப்பாராட்டுவார். 'சக்தியாகவும் சிவமாகவும் அருள்புரியும் தன்மையான்' (1) என்பர். மணமாகவும் மலராகவும் உள்ளவன் (3) என்று இவர் கூறுதல், "வாச மலரெலா மானாய் நீயே" என்னும் திருவாக்கையும், "உள்ளத்தி னுள்ளன் புடையார் கருத்தறியும், வள்ளல்" என்பது "மனத்து ணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னை" என்பதையும் நினைப்பிக்கின்றன. "பட்டிமையில் லாருளத்தின் பாக்கியமே" (268) என்பதில் வஞ்சகமில்லாருடைய உள்ளத்தில் வீற்றிருக்குந் தன்மையைப் புலப்படுத்துகின்றார். "மெய்படியான், திங்கட் சுதையெனவே செய்யுமொரு மூப்பாலுஞ், சங்கத்தி னூட்டுந் தமிழ்ப்பாலன்" (167–8) என்பதனாலும், "தெள்ளுதமிழ்ச் சொல்லே, பொருளே" (380–81) என்பதனாலும் இறைவருக்குத் தமிழோடுள்ள தொடர்பைக்கூறுகின்றார்.

## பொருளணிகள்.

கடம்பவனநாதர் திருவுலாப்போதுதற்குமுன் திருவாடை முதலியன அணிந்துகொள்வதாகக்கூறியுள்ளபகுதியில் (59-68) சிலேடையொடு கூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. திலகம் தீட்டியதை, தேவியோடுசேர்ந்திருக்கச்செய்யும் மன்மதனைக் கோபித்த அக்கினியிருக்கும் வீட்டின் கதவைப் பூட்டி ஒரு முத்திரையிட்டதுபோல இருந்ததென்கின்றார். திருக்குடைநிழற்றல் முதலியவற்றைச்சொல்லும் பகுதியிலும் (77–82) அவ்வணி அமைந்துள்ளது. மங்கையர்கள் சாமரையிரட்டியது சிவபிரான் திருமுடியிலுள்ள கங்கை கிரீடத்தால் மறைக்கப்பட்டமையால் அதிற்சென்று விளையாட எண்ணிய அன்னங்கள் அதனைக்காணாமற் சுழல்வதுபோன்றிருந்தது என்கின்றார். சூரியோதயத்தைச் சொல்லுகையிலும், அசிவையின்வருணனையிலும் (274–85) அவ்வணியினமைதி காணப்படுகின்றது.

137, 147, 203, 346-7-ஆம் கண்ணிகளில் சிலேடையணி அமைந்துள்ளது. 237–9-ஆம் கண்ணிகளில் கடம்பவனநாதருக்கும் அம்பிகைக்கும் மங்கைக்கும் சிலேடையும், 337–9-ஆங் கண்ணிகளில் மன்மதனுக்கும் வேடனுக்கும் சிலேடையும் காணப்படுகின்றன. சொற்பொருட்பின்வருநிலை (73), சொற்பின்வருநிலை (125, 166–70, 225),

நிரனிறை (296–8, 318–21), என்னும் அணிகளும் இடையிடையே உள்ளன.

44–5-ஆங் கண்ணிகளில் இரதம் முதலிய நாற்படைகளின் பெயர்களும், 46-ஆம் கண்ணிமுதலியவற்றில் அரசன், மந்திரி, தளகர்த்தன், ஸ்தானுபதி, ராயசத்தன், அதிகாரி, காரணிகன், கற்பித்தோன், மகாஜனன், பிரவர்த்தகன் என்னும் உத்தியோகப்பெயர்களும், 112-ஆம் கண்ணி முதலியவற்றில் வேறுசிலபெயர்களும், 205 ஆம் கண்ணியில் காட்டுமான் என்பதும் தொனியில் அமைந்துள்ளன.

பலவகையான படக்கணிகளும் (38, 40–42, 126–7, 141, 235, 247, 258, 269-71, 360-67), திரிபும் (காப்பு, 13, 32, 41, 43, 256), சந்தமும் (195–7, 226–7), இன்றியமையாத இடங்களில் வகையுளியும் (34–5, 106, 146), இந்நூலிற் காணப்படும்.

## சொல்லாட்சி.

மந்த்ரி (46), விக்ரமன், ப்ரபை, சக்ரம் (196), அநுக்ரகம் (197), மந்த்ரம் (217), சித்ரமணி (291) என வருவனபோன்ற ஸம்யுக்தாக்ஷரங்களமைந்த வடசொற்களையும்; தீனப்ரவாத்தகன் (49-50), அங்குரார்ப்பணம் (52), சொர்க்க மத்ய பாதலம் (101,) பாதாதிகேசபரியந்தம் (129), சீதள சோம திவாகர லோசன, வேத சொரூப விநோத புராதன, மாருத பாவக மாதவ சாயக, மேரு சராசன வீர சரோருக பாதன் (226-8), வீரப்ரதாபவிசயம் (322) என வருவனபோன்ற வடசொற்றொடர்களையும்; வத்திரம், வர்ச்சித்து (59), தெக்கணம் (12), பிரமவத்தி (24), கெங்காதரன் (62), நாதிக்க (162) முதலிய வடசொற்றிரிபுகளையும் ஆளுகின்றார்.

வச்சு (35), ஆச்சுது (206), தணிச்சு (283) என்பனபோன்ற மரூஉமொழிகள் உரிய இடங்களில் அமைந்துள்ளன. இவர் எடுத்தாண்ட சில அரும்பதங்கள்: திண்டு (88), கும்பு தெம்பு, (141), பாணினி (விறலி) (295), சரி (346), தெரியலர் (பகைவர்) (282), உச்சிதம் (323); பொருந்த என்னும் பொருளில் ஏல என்பதனையும் (104, 177), ஒருங்கே என்னும் பொருளில் ஒருமிக்க என்பதனையும் (106, 191), நன்கமைத்தலென்னும் பொருளில் பாணித்தலென்பதனையும் (118, 252), யானையென்னும் பொருளில் ஓர்கையென்பதையும் (364 இவர் வழங்குகின்றார்.

## ஆசிரியர் இயல்பு.

இத்தகைய அரியநூலை இயற்றிய இவ்வாசிரியர் சிவபக்திச் செல்வமும், சிவபெருமானது கருணையை வியந்துபாராட்டும் தன்மையும், சிவனடியார் பக்தியும், சிவதலங்களில் அன்பும், பலநூலாராய்ச்சியும், ஆசிரியபக்தியும் உடையவரென்று தெரியவருகின்றது.

இவ்வுலாவின் ஈற்றிற் காணப்படும், 'விருப்பிருக்கும்' என்னும் செய்யுளால் அக்காலத்து அடியார்கள்செய்யும் திருப்பணிகளுக்குச் சிலர் இடையூறு செய்துவந்தார்களென்றும் அதுகண்டு இவர் மிகவருந்தினரென்றும் தோற்றுகின்றது.

இந்நூல் ஏட்டுப்பிரதி ஒன்று ஏறக்குறைய 50-வருடங்களுக்கு முன்பு திருவாவடுதுறை ஆதீனத்துப் புத்தகசாலையிற் கிடைத்தது; அதனைப் பிரதிசெய்துகொண்டேன். அதுமுதல் இன்றுவரை தேடியும் வேறுபிரதி கிடைக்கவில்லை. ஸ்ரீகடம்பவனேசருடைய திருவருள் கூட்டுவித்ததனால் இப்பொழுது குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று.

கடம்பர்கோயில் சம்பந்தமான அரிய சில செய்திகளை அவ்வூர் ஆயுர்வேதவைத்தியர் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். குருசாமிமுதலியாரவர்கள் அன்புடன் விசாரித்து விளங்கச்செய்தார்கள்.

இதனைப் பதிப்பிக்குங்காலத்து உடனிருந்து பலவகையான உதவிபுரிந்துவந்த உபகாரிகளின் அன்புடைமை மறக்கற்பாலதன்று.

பல வருஷங்களாகத் தேடிச் சேகரித்துப் பரிசோதித்து வைத்திருந்தும் பலவிதமான காரணங்களால் வெளிப்படுத்தாமலிருக்கும் இதைப்போன்ற பிரபந்தங்கள் பல உண்டு. தனித்தனியே வெளிப்படுத்தினால் காலம் நீட்டிக்குமென்றும் வேறு காரணங்களைக்கருதியும் சிலகாலமாக மாதப்பத்திரிகைகள்மூலம் அவை வெளியிடப்பெற்று வருகின்றன. அவ்விதம் செந்தமிழ்ப்பத்திரிகையில் இக்காலத்து வெளிவரும் நூல்களில் இது மூன்றாவதாகும்.

சென்னை,
4—11—1933.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| •8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13.* | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 8 | 0 |
| 2. | களவழி (5) இனியவைநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| •9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 5 | 0 |
| 20. | கரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 24. | குருமொழிவிஞவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |